1975 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) ரூ. 33,500 மதிப்பீட்டில் இந்த வேலை நடைபெற்று வருகிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இந்த ரோட்டின் நீளம் எவ்வளவு? இவ்வளவு காலம் வேலை முடிவடையாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க அரசு உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த ரோட்டின் நீளம் 3.6 கிலோமீட்டர்ஸ். இந்த வேலை ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியத்தால் டெண்டர் விடப்பட்டு வேலை நடைபெற்று வருவதாகவும் சிக்கிரத்தில் முடிந்து விடும் என்றும் தகவல் வந்திருக்கிறது.

ஒன்றியங்களுக்குத் தேவைப்படும் குழாய்கள்

*268 **வினா—திரு. ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மூலமாக ஊராட்சி ஒன்றியப் பணிகளுக்குத் தேவைப்படும் ஜி.ஐ. பைப்புகள் ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்கவேண்டுமென்று 30—10—1974-ல் உத்தரவு போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். தஞ்சை மாவட்ட கீழத் தஞ்சை டிவிஷனல் என்ஜினியர் 31—7—74-ம் தேதி அன்று நாகப்பா கார்ப்பரேஷன் என்ற கம்பெனியின் டெண்டரை அப்ரூவ் செய்திருக்கிறார்கள். பிறகு அதே கம்பெனிக்கு 3—10—1974-ம் தேதி மேலும் இரண்டு மாதங்களுக்கு அந்த டெண்டரை நீட்டித்து

உத்தரவு போட்டிருக்கிறார்கள். இவ்வாறு போடுவது சரிதானா? அந்தந்த சமயத்திற்குத் தேவையான பைப்புகளை டெண்டர் கோரி வாங்குவதுதான் முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தக் கேள்வியில் குறிப்பிட்டிருப்பது, ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டதா என்பதுபற்றி. நான் சொன்னேன், ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் வாங்க வேண்டும் என்று உத்தரவு போடப்படவில்லை என்று. அங்கு என்ன நடந்தது என்றால் ஊராட்சி ஒன்றியங்கள். ஜி.ஐ. பைப்ஸ் வாங்குவது என்பது ஒன்றிய வாரியாக டெண்டர் வைத்து வாங்குவது. ஆனால் அந்த மாவட்டத்தின் கோட்டப் பொறியாளர் அவர்கள் ஒரு ஒன்றியத்திற்கு என்று டெண்டர் வாங்குகிறபோது விலை அதிகமாகிறது என்றும் ஒரு மாவட்டத்திற்கு அல்லது அவர்களது பகுதியில் இருக்கிற எல்லா ஒன்றியங்களுக்கும் சேர்ந்து ஒரு டெண்டர் கேட்கிறபோது விலை குறைகிறது, ஆகவே அவர்கள் அப்படி டெண்டர் கோரினார் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சேர்த்து. அதில் நாகப்பா கம்பெனியின் டெண்டர்தான் லோயஸ்ட் டெண்டர். அதேபோல் மற்ற ஒன்றியங்கள் தனிப்பட்டமுறையில் டெண்டர் கோரியதும் அதிலுள்ள லோயஸ்ட் டெண்டர், நாகப்பா கம்பெனியின் டெண்டர்தான் லோயஸ்ட் டெண்டர். ஆகவே இந்த வசதியை ஒன்றியங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும்தான் அது செய்யப்பட்டிருக்கிறது.

தொட்டியம்—சீனிவாசநல்லூர் சாலை

* 269 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி வட்டம், தொட்டியத்திலிருந்து சித்தூர் வழியாக சீனிவாசநல்லூர் வரை செல்லும் சாலையை செப்பனிட அரசு திட்டமிட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதுவரை நிறைவேற்றப்படாமல் காலதாமதம் ஆவதற்குரிய காரணம் யாது?